Registered as a Newspaper in Ceylon ★★ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

மலர் 7 இதழ் 58

National Tamil Daily தேசிய தினசரி

குரோதி பங்குனி 27 துல்ஹஜ்பிறை 6 (9-4-65) வெள்ளிக்கிழமை

## வருவாய் புத்தாண்டே!!

கொழும்பு, வியாழன்

"வருக வருக புத்தாண்டே! எப்பொழுது நீ வருவாய் நாமெல்லாம் உளம்களிக்க" என்று எதிர் பார்த்துக் கொண்டிருப்பவர்கள் பொலிஸ் இலாகாவினர்தான். சிங்கள-தமிழ் புதுவருடப் பிறப்பைக் கொண்டாடுவதற்கென அரசாங்க இலாகா உத்தியோகத்தர்களுக்கும், ஊழியர்களுக்கும் முற்பணமும் போதிய லீவும் வழங்கப்

(5-ம் பக்கம் பார்க்க)

நீடித்த பாவனைக்கு

சொனென்ஷீன்



சொனென்ஷீன்

பற்றறிகளையே உபயோகியுங்கள்

வடமாகாண ஏகவிநியோகஸ்தர்கள்:

துரை அன் கோ

23/3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# இன்று பார்லிமெண்ட் திறப்புவிழா

## எதிர்க்கட்சியினர் ஆர்ப்பாட்டம் செய்யலாம்

கொழும்பு, வியாழன்

நாளை வெள்ளிக்கிழமை காலை சுதந்திர இலங்கையின் ஆறாவது பார்லிமெண்ட் சம்பிரதாய முறைப்படி திறந்துவைக்கப்படும். புதிய பார்லிமெண்ட் கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்து கவர்னர் ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லவா சிம்மாசனப் பிரசங்கம் நிகழ்த்துவார்.

காலை 8-30 மணிக்கு கவர்னர் ஜெனரல் புதிய பார்லிமெண்ட் கூட்டத்தைச் சம்பிரதாய முறைப்படி ஆரம்பித்து வைத்து சிம்மாசனப் பிரசங்கம் நிகழ்த்துவார்.

கவர்னர்ஜெனரலின் வாசஸ்தலமான ராணிமாளிகையிலிருந்து ஜனப்பிரதிநிதிகள் சபை வரை வீதி இருமருங்கிலும் முப்படைகள் அணிவகுத்து நிற்கும். கவர்னர் ஜெனரல் பார்லிமெண்டில் வந்திறங்கியதும் விமானப்படை வீரர்கள் அணிவகுத்து மரியாதைசெலுத்துவர். பார்லிமெண்ட் கட்டப்படிகளின் இருமருங்கிலும் சாரணர்களும் அணிவகுத்து நின்று கவர்னர் ஜெனரலுக்கு மரியாதை செலுத்துவர்.

### எதிர்க்கட்சி ஆதரவாளர்

பார்லிமெண்ட் திறப்பு விழாவின்போது பார்லிமெண்ட் கட்டிடத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் ஏற்பாடு செய்திருப்பதாக அரசாங்க கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. காலிமுக மைதானத்தில் பெருமளவில் ஆர்ப்பாட்டம் நடத்த அவர்கள் திட்டமிட்டிருக்கின்றனராம்.

## இன்றுவரும் அமெரிக்க ஆராய்ச்சிக் கப்பல்

### இந்துசமுத்திர சஞ்சாரத்தை முடித்து பவனிக் செல்லும்

கொழும்பு, வெள்ளி

இந்துசமுத்திரத்தில் தனது சஞ்சாரத்தை முடிக்கவிருக்கும் "அட்லாண்டிஸ் 2" என்ற அமெரிக்க ஆராய்ச்சிக்கப்பல் இன்று கொழும்பு வரும். பின் பவனி துறைமுகங்கள் வழியாக அமெரிக்காவுக்குத் திரும்பிச்செல்லும்.

கொழும்பில் ஸ்தல விஞ்ஞான ஏற்பாடுகளை இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கம் கவனிக்கும். டாக்டர் ஆர். ஓ. பி. விஜயசேகரா, டாக்டர் எஸ். செந்தி சண்முகநாதன் ஆகிய இருவரும் இச் சங்கத்தின் பொதுக்காரியதரிசிகள்.

அமெரிக்காவின் தனிப்பட்ட விஞ்ஞானக் கழகம் ஒன்றுக்கு இக்கப்பல் சொந்தமானது. இக்கப்பல் இந்துசமுத்திர ஆழ்கடல் ஆராய்ச்சியில் சர்வதேச இந்துசமுத்திர ஆராய்ச்சி இயக்கத்துடன் ஒத்துழைத்துவருகிறது.

"அட்லாண்டிஸ் 2" 1963ம் ஆண்டு கடலாராய்ச்சியில் இறங்கியது. அட்லாண்டிக் சமுத்திரம் கரிபியன் கடல் ஆகியவற்றிலும் இது ஆராய்ச்சிநடத்தியது.

1950ம் ஆண்டு இந்துசமுத்திர ஆராய்ச்சியில் சுமார் 25 நாடுகளைச் சேர்ந்த கப்பல்களும் விஞ்ஞானிகளும் ஈடுபட்டனர்.

இந்துசமுத்திரப் பகுதியில் குறிப்பாக அரபிக்கடலிலும், வங்காளவிரிகுடாக் கடலிலும் ஏராளமான மீன்கள் இருப்பது இந்த ஆராய்ச்சியின் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட உண்மைகளில் ஒன்றாகும்.

## யோகசுவாமிகள் குருபூசை

யாழ்ப்பாணம், வெள்ளி

யோகசுவாமிகள் குருபூசை கொழும்புத்துறை ஆச்சிரமத்தில் வருகிற ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படவிருக்கிறது. சிவதொண்டன் நிலையத்தில் அன்றுகாலை அபிஷேக ஆராதனை நடைபெற்றபின் பாதயாத்திரை ஆரம்பமாகி குருபூசை நடைபெறும் தலமாகிய கொழும்புத்துறை ஆச்சிரமத்தை வந்தடையும்.

## வரட்சி பரவுகிறது

கொழும்பு, வியாழன்

நாட்டின் பல பகுதிகளில் கடும்வரட்சி நிலவி வருகின்றது. இதுகாரணமாக நாட்டின் பலபகுதிகளிலும் சளிச்சுரம், பொக்குளிப்பான் போன்ற தொற்றுநோய்கள் பரவுமென சுகாதார இலாகா அதிகாரிகள் அச்சம் தெரிவித்துள்ளனர். சளிச்சுரம் போன்ற தொற்றுநோய்களால் ஏராளமானோர் பீடிக்கப்பட்டதால் அரசாங்க ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பகுதிகள் எந்நேரமும் நோயாளர் திரளக்கூடிய இடமாகவே காட்சியளிக்கிறது.

## கோண்டாவிலில் புகையிரத விபத்து

கோண்டாவில், வியா.

இன்று காலை கோண்டாவில் புகையிரதநிலையத்துக்கும் இணுவில் புகையிரதநிலையத்துக்குமிடையில் உள்ள காரைக்காடு புகையிரதக் கடவையில் நடைபெற்ற விபத்தொன்றில் ஒருவரின் கார் 200 யார்களுக்கு அப்பால் தூக்கிவீசப்பட்டது. கார் பலத்த சேதத்துக்குள்ளாகியதுடன், கார்ச்சாரதி படுகாயங்களுடன் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

காலை 7-15க்கு காங்கேசன்துறையிலிருந்து புறப்பட்ட சரக்கு வண்டியும் சி. ஈ. தொடசிலக்க கார் ஒன்றும் மோதுண்டன. காரில் சாரதி மட்டுமே இருந்தார்.

கல்லுகம் பொலிசார் விசாரணை நடத்துகின்றனர்.

காயமுற்ற கார்ச்சாரதி சிவபாதம் குணமடைந்துவருவதாக ஆஸ்பத்திரிவட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## 3 லட்சம் இந்தியர் தாய்நாடு திரும்புவர்

### 2 வருடத்தில் அனுப்ப ஏற்பாடு

பம்பலப்பிட்டி, வியா.

சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தில் கூறப்பட்டிருப்பதுபோல்லாமல் இரண்டு வருடங்களுக்குள் இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினரில் 3 லட்சம் பேர்களை இந்தியா ஏற்றுக்கொள்ளுமென்றும் இவர்களை இந்தியாவுக்கு அனுப்புவதில் இலங்கை அரசாங்கம் துரித நடவடிக்கை எடுக்குமென்றும் அறியப்படுகிறது.

உடனடியாக ஒன்றேகால் லட்சம் இந்திய வம்சாவழியினர் இந்தியா செல்லத் தயாராக இருக்கின்றனரென்றும் அவர்களை ஏற்று அவர்களுக்குப் புனர்வாழ்வளிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள இந்திய அரசாங்கம் ஒப்புதல் கொண்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.

### 'விசாரணை வேண்டும்'

கொழும்பு, வியாழன்

இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் ஊழியர்கள் சங்கம், கடந்த காலத்தில் நிகழ்ந்த மோசடிகள்பற்றி உடனடியாக விசாரணை செய்ய வேண்டுமென வர்த்தகமந்திரி டாக்டர் எம். வி. பீ. பீரிஸிடம் கோரியுள்ளனர்.

## மேஜர் ராஜபக்ஷ லீவில் செல்ல உத்தரவு

### மேல்நடவடிக்கை பற்றி ஆலோசிக்கப்படுகிறது

கொழும்பு, வியாழன்

டிரட்சிசதிவழக்கில் ஒழுக்காற்று சாட்சியான மேஜர் டி. எல். டபிள்யு. ராஜபக்ஷாவை லீவில் செல்லுமாறு இராணுவ தளபதி சேர்னல் உடுகம உத்தரவு பிறப்பித்துள்ளார். இவருக்கு பதிலாக உத்தரவு பிறப்பிக்கும் பிரிவில் மேஜர் எல். வி. ரலைகுங்கா கடமையாற்றுவார்.

மேஜர் ராஜபக்ஷாவிற்கு எதிராக நீதியரசர்களின் தீர்ப்

(6-ம்பக்கம் பார்க்க)

புது வருடப்பிறப்பை

சிறப்பாகக் கொண்டாட

ஏராளமான பிடவை வகைகளை

வரவழைத்துள்ளோம்.

மிகவும் குறைந்த விலைகளில்

புதிய டிசைன்களிலுள்ள

ஜவுளிகளை தெரிவுசெய்வதற்கு

இன்றே

எமது ஸ்தாபனத்திற்கு விஜயஞ்செய்யுங்கள்.

மைலன்ட்ஸ்

115, 117, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

மலிவு! S. R. S. மலிவு!

ஜவுளி மாளிகையில்

புதுவருடப் பிறப்பை முன்னிட்டு

ஏராளமான

பிடவைத் தினுசுகள் வந்திருக்கின்றன.

விலைகள் ரொம்பவும் குறைத்திருக்கின்றோம்.

உங்கள்

தேவைகளை முன்னதாகவே வந்து தெரிவுசெய்யுங்கள்

எமது சொந்த தறிகளில் தயார் செய்த

80, 100, 120-ம் நம்பர் கைத்தறி சேலைகளும்

விற்பனைக்கு இருக்கின்றன.

எஸ். ஆர். செல்லத்துரை

216, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 296

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

உலக அரசாங்கம் அமையாத வரையில் உலகமே நிலைப்பதற்கில்லை.

— விநோபாஜி.

# ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box: 49, Jaffna. Telegrams: 'EELA NADU' Jaffna Phone: 389.

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு பங்குனி மீ 27 உ. (9-4-65)


## வெளிநாட்டு தூதரகங்கள்

இலங்கையிலுள்ள, வடக்கு வியட்நாம், வடகொரியா, கிழக்கு ஜெர்மனி ஆகிய நாடுகளின் 'கான்ஸல் ஜெனரல்'களுக்கு இலங்கை வெளிவிவகார அமைச்சு அனுப்பியுள்ள குறிப்பு ஒன்றில் இந்த மூன்று 'கான்ஸல் ஜெனரல்' காரியாலயங்களிலுமுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும்படியும் 'மேலதிகமாக உள்ளவர்களை' ஒரு வாரத்துக்குள் திருப்பி அனுப்புமாறும் கேட்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கை இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கையில் சில மாறுதல்கள் ஏற்பட்டிருப்பதைக் குறிப்பதாகத் தோன்றுகிறது.

காலஞ்சென்ற திரு. பண்டாரநாயக்காவின் அரசாங்கமும் பின்னர் ஆட்சிக்கு வந்த திருமதி பண்டாரநாயக்காவின் அரசாங்கமும் 'நடுநிலைமை'யே தங்கள் அரசாங்கங்களின் வெளிவிவகாரக் கொள்கையெனத் தெரிவித்தனர். ஆனால் முன்னைய அரசாங்கம் சரியான நடுநிலைமைக் கொள்கையைக் கடைப்பிடிக்கவில்லையென்றும் ஒரு பக்கமாகச் சாய்ந்துவிட்டதாகவும் புகார் கூறப்பட்டது. இன்று பதவிக்கு வந்துள்ள 'தேசிய அரசாங்கம்' சரியான நடுநிலைமைக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் என பிரதமர் டட்லி பதவியேற்றதும் தெரிவித்திருந்தார். ஒவ்வொரு அரசாங்கமும் தாம் நடுநிலைமைக் கொள்கையையே கடைப்பிடிப்பதாகக் கூறி அதற்கு வியாக்கியானமும் கொடுக்கலாம். எனினும் சகல நாடுகளுடனும் நட்புறவுடனிருக்கும் நடுநிலைமைக் கொள்கையை சரியான முறையில் இந்த அரசாங்கம் பின்பற்றுமென்று எதிர்பார்ப்போம்.

வடகொரியா, வடவியட்நாம், கிழக்கு ஜெர்மனி ஆகிய நாடுகளின் 'கான்ஸல் ஜெனரல்' காரியாலயங்களில் தேவைக்கு அதிகமான உத்தியோகத்தர்கள் இருப்பதாகவும் அவர்களை ஒருவாரத்துக்குள் திருப்பி அனுப்புமாறும் இலங்கை வெளிவிவகார அமைச்சு கேட்டுள்ளது. இவ்வாறு கேட்பதற்கு இலங்கைக்கு உரிமையும் இருக்கிறது. இலங்கை சுதந்திரமடைந்த பின்பு குறிப்பாக ஐ. நா.வில் இலங்கை அங்கத்துவம் பெற்ற பின்பு உலகின் பல நாடுகளுடனும் ராஜீய உறவுகளையும் வர்த்தக உறவுகளையும் ஏற்படுத்திக் கொண்டுள்ளது. உறவு வைத்துள்ள எல்லா நாடுகளிலுமிருந்து இலங்கைக்குப் பெரும் பயன் கிடைத்து வருவதாகக் கூறமுடியாது. வெளிநாடுகள் இலங்கையில் தங்கள் தூதுவர் காரியாலயங்களை வைத்துள்ள அதே அடிப்படையில் இலங்கையும் அந்நாடுகளில் தனது தூதுவர் காரியாலயங்களை வைத்துக் கொள்ள வேண்டியுள்ளது. இதனால் இலங்கைக்குத் தேவையற்ற செலவும் ஏற்படுகிறது. இலங்கைக்குப் பயனற்ற நாடுகளிலுள்ள இலங்கையின் தூதரகங்களை மூடிவிடுவதன்மூலம் தேவையற்ற செலவைக் குறைத்துக் கொள்ள வழி பிறக்கும். வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களில் உத்தியோகத்தர் எண்ணிக்கையைக் குறைத்துக் கொள்வதுடன் இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்களும் அந்நாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களிலுள்ள [illegible] எண்ணிக்கை உத்தியோகத்தர்களையே வைத்திருக்க வேண்டுமென்று அந்நாட்டு அரசாங்கங்களுடன் இலங்கை ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். இவ்விதம் நிரந்தரமான ஒரு ஏற்பாடு செய்வதாயின் "அந்நியர் இங்கு குவிகிறார்கள்" என்ற புகாருக்கும் இடமில்லாது போகும். குறிப்பிட்ட ஒருசில நாடுகளின் தூதர் காரியாலயங்கள் விஷயமாக இலங்கை அரசாங்கம் பாகுபாடு காட்டுகிறது என்ற புகாருக்கும் இடமேற்படாது.

## தொழில்நுட்பக் கல்வி உதவி டைரக்டர் யாழ்ப்பாணம் வந்தார்

யாழ்ப்பாணம், வெள்ளி

தொழில்நுட்பக்கல்வி இலாகாவின் உதவி டெபியுடி டைரக்டராக புதிய நியமனம் பெற்றுள்ள திரு எஸ். எச். சுமணதாசா இலங்கையில் உள்ள கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரிகளை பார்வையிட்டுவருகின்றனர்.

சென்ற புதன்கிழமை அவர் யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரியை பார்வையிட்டார். பாடசாலை அதிபர் திரு க. நாகலிங்கத்துடன் பாடசாலையில் உள்ள தொழிற்கூடங்களையும் மற்றும் வகுப்புகளையும் பார்வையிட்டு, அங்குள்ள குறைகளையும் கேட்டறிந்தார்.

சகல கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரிகளின் பொறுப்பும் இவருடையதேயாகும். திரு. சுமணதாசா நேற்று கொழும்பு திரும்பினர்.

## விடுதலையானோர் கதி என்ன?

கொழும்பு, வியாழன்

புரட்சி சதிவழக்கில் விடுதலையான பன்னிரண்டு உயர்தர அதிகாரிகளின் எதிர்காலம் பற்றி தேசிய அரசாங்கம் ஆலோசனை செய்துவருகிறது.

தங்களைத் திரும்பவும் வேலையில் அமர்த்துமாறு கோரி இவர்கள் ஏற்கனவே தங்கள் தங்கள் இலாகாவுக்கு விண்ணப்பித்திருந்தனர். மறு அறிவித்தல் கிடைக்கும்வரை அவர்கள் எந்த இராணுவ ஸ்தாபனத்திலும் சேரக்கூடாதென, அவர்களின் விண்ணப்பத்திற்கு பதில் கிடைத்துள்ளது.

# குருநாகல் நகரில் தனித்தமிழ் பாடசாலை நிறுவுக

## ஆசிரியர் சங்கம் கோரிக்கை

குருநாகல், வியாழன்

குருநாகல் பட்டின பகுதியில் ஓர் தனித்தமிழ் பாடசாலை இல்லாமல் இருப்பதால் லக்தாச மகாவித்தியாலயத்துடன் இணைந்துள்ள தமிழ் பிரிவையும், சமங்கலை மகாவித்தியாலயத்தில் இணைந்துள்ள தமிழ்ப்பிரிவையும் ஒன்று சேர்த்து அங்கமைகாவித்தியாலத்தில் இப்பொழுது கட்டப்பட்டுள்ள புதிய கட்டடத்தில் மாலையில் இயங்கக்கூடிய ஒரு தனித்தமிழ் பாடசாலை ஆக்கித்தரவேண்டும். என்று அரசாங்கத்தைக் கோரும் தீர்மானம் அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழர் ஆசிரியர் சங்க குருநாகல் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

"தமிழ்ப் பாடசாலைகளுக்கு அனுப்பப்படும் எந்த ஒரு கடிதமும் பாடசாலை மொழியில் அமைந்ததாய் இருக்க வேண்டும் என்றும் குருநாகல் பகுதியில் மூடப்பட்ட தமிழ்ப் பிரிவுகளாகிய டெல்விற்ற அரசினர் சிங்கள தமிழ் பாடசாலையையும், புனுவெல சிங்கள தமிழ் பாடசாலையையும் மீண்டும் திறந்து வகுப்புகளை நடத்தவேண்டும்என்ற தீர்மானமும் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது;

நிறைவேற்றப்பட்ட முக்கிய தீர்மானங்களில் சில பின்வருமாறு -

(1) ஆசிரிய இடமாற்றங்களில் அரசியல் தலையீடுகளை அனுமதிக்கப் போவதில்லை எனக் கூறிய தற்போதைய கல்விமந்திரி அவர்களின் கூற்றுக்கு நன்றிதெரிவிப்பதுடன் தற்போது அமுலிலுள்ள மாற்றத்திட்டத்தின்படி ஆசிரியர்களை மே மாதம் முதலாம் திகதியில் இருந்து விண்ணப்பித்த இடங்களுக்கு மாற்ற அனுமதிக்கும்படி கல்விமந்திரி அவர்களைக் கேட்டுக்கொள்வது.

(3) வெளி மகாணங்களில் சேவைசெய்யும் ஆங்கில ஆசிரியர்களையும் விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர்களையும் தற்போதுள்ள மாற்றத்திட்டத்தின் கீழ்க் கொண்டுவந்து அவர்களும் தங்கள் சொந்த மாவட்டங்களில் கடமைபுரிவதற்குச் சந்தர்ப்பம் அளிக்க வேண்டுமெனக் கல்விப்பகுதி நிரந்தரக்காரியதரிசியை கேட்டுக்கொள்வது.

(8) தோட்டப்பாடசாலைகளில் 10 வருடங்களுக்கு மேல் படிப்பிக்கும் எஸ்.எஸ்.ஸி தராதரமுடைய ஆசிரியர்களுக்கு கல்விப்பகுதி ஆசிரிய தராதரப்பத்திரம் வழங்கும் அதே நோக்கில் தோட்டப் பாடசாலைகளில் படிப்பித்துப் பின்பு அரசினர் பாடசாலைகளில் கடமைபுரியும் ஆசிரியர்களின் சேவையுடன் தோட்டப்பாடசாலைச் சேவையும் சேர்த்துக் கவனிக்கும்படி கல்விப்பகுதியின் நிரந்தரக் காரியதரிசியைக் கேட்டுக்கொள்வது.

புதுவருட உத்தியோகத்தர் தெரிவும் நடைபெற்றது.

# அவசியமானால் நீண்டகால போருக்கு நாங்கள் ஆயத்தம்

## வியட்நாம் பற்றி ஜோன்ஸன்

வாஷிங்டன், ஏப்ரல் 8

தென்கிழக்காசியாவின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு 100 கோடி டாலர் (சுமார் 500 கோடி ரூபாய்) உதவியளிக்க அமெரிக்கா முடிவுசெய்திருப்பதாயும் ரஷ்ய உதவியுடன் இது நிறைவேற்றி வைக்கப்பட வேண்டுமென்றும் ஜனாதிபதி ஜோன்ஸன் பால்டிமோரில் பேசியபோது குறிப்பிட்டார்.

தென்கிழக்காசிய நாடுகளும் இவ்விஷயத்தில் ஒத்துழைக்க வேண்டுமென திரு. ஜோன்ஸன் கூறினர். ஐ. நா. பொதுக்காரியதரிசி யூதாண்ட் இத்திட்டத்தைத் துவக்கி வைக்கவிருப்பதாய்க் கூறினர்.

திரு. ஜோன்ஸன் மேலும் பேசியபோது சீன ஏற்கனவே திபேத்தைக் கைப்பற்றியிருப்பதுடன் இந்தியாமீது தாக்குதல் நடத்தியிருப்பதாயும் தென்வியட்நாமைக் கைப்பற்ற முயற்சித்துவருவதாயும் குற்றஞ்சாட்டினர்.

அமெரிக்கா அவசியமானால் வியட்நாமில் நீண்டகால போருக்கு ஆயத்தமாயிருப்பதாக ஜனாதிபதி கூறினர்.

## வடபகுதி அரசன் விசாரணை

யாழ்ப்பாணம், வெள்ளி

வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் காவற்றுறைக் கொலை முயற்சி வழக்கு நேற்றுக் காலை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது நீதியரசர் திரு. பி. ஸ்ரீஸ்கந்தராசா இவ்வழக்கை அடுத்த பருவகால விசாரணைக்கு ஒத்திபோட்டார்.

நீதியரசர் திரு. பி. ஸ்ரீஸ்கந்தராசாவுக்கு பதிலாக நீதியரசர் திரு: வி. மாணிக்கவாசகர் வடபகுதி அசைஸ் நீதிமன்ற வழக்குகளை தொடர்ந்து விசாரணை [illegible] இம்மாதம் [illegible] கூடும்.

## கடத்தல் முயற்சி கண்டுபிடிக்கப்பட்டது

மாவிட்டபுரம், வியாழன்

நாற்பதினாயிரம் ரூபாய் பெறுமதியான 100 மூடை கராம்பு சட்டவிரோதமாகக் கடத்தல் செய்யப்பட்டபோது, இயக்கச்சியில் உள்ள இராணுவத்தினர், லெப்டினண்ட் குணவர்த்தன தலைமையில் சென்று கைப்பற்றினர்.

பருத்தித்துறையிலுள்ள குடா அரிப்பு சடற்கரையில் கராம்பு மூடைகள் லொறியிலிருந்து பறிக்கப்பட்டசமயமே இராணுவத்தினர் கைப்பற்றினர். இருமூடைகள் மட்டும் லொறியிலிருந்து கீழே இறக்கப்பட்டிருந்தது. மிகுதி 98 மூடைகளும் லொறியுள் இருந்தன. லொறி மணலில் புதைந்திருந்த காரணத்தால் கள்ளக்கடத்தல்காரர்கள், இராணுவத்தினரைக் கண்டதும் ஓட முயற்சித்தார்களென்றும், இராணுவத்தினர் நால்வரைக் கைதுசெய்து சுங்கப்பகுதிப் பாதுகாப்பில் வைத்திருப்பதாகவும் தெரியவருகிறது.

பருத்தித்துறை சுங்க அதிகாரி திரு. எஸ. பி அமரசிங்காவும், உதவித்தடுப்பதிகாரிகளான எஸ தாமோதரம்பிள்ளை, எம் வீரசுந்தரம் ஆகியோரும் விசாரணைசெய்துவருகிறார்கள். 80,000 ரூபாய் பெறுமதியான லொறியையும் பாக்குமூடைகளையும் இராணுவத்தினரும், சுங்கப்பகுதியினரும் காவல்புரிந்து வருகின்றனர்.

## 'வாகன வசதி செய்யவும்'

கொழும்பு, வியாழன்

தற்பொழுது துறைமுகத்தில் இறக்குமதிசெய்யப்பட்டிருக்கும் அத்தியாவசிய உணவுப்பொருட்களை அந்தந்த இடங்களுக்கு கொண்டுசெல்வதற்கு போதியளவு வாகன வசதி செய்து கொடுக்குமாறு எல்லா அரசாங்க இலாகாக்களுக்கும் வர்த்தக மந்திரி டாக்டர் எம். வி. பி. பீரிஸ் தெரிவித்துள்ளார்.

## நாடும் நடப்பும்

உற்ளூர் உறவினர் நிறைய உள்ள ஒரு குடும்பம், அந்தக் குடும்பத்தில் நேற்று முன்தினம் ஒரு திருமண நிகழ்ச்சி நடைபெற்றது, அந்த வைபவத்துக்கு உறவினர் பலர் வரவில்லையாம்; காரணம் என்ன தெரியுமா? நடந்துமுடிந்ததேர்தல்தான்.

தேர்தலில் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் ஒரு கட்சி அபேட்சகராகப் போட்டியிட்டார், திருமணம் நிகழ்ந்த வீட்டுக்காரர் மாற்றுக்கட்சி அபேட்சகரை ஆதரித்தார். தேர்தல் பிரசாரக்கூட்டத்துக்கும் தலைமை வகித்தாராம். அவர் ஆதரித்த அபேட்சகர் வெற்றியீட்டிவிட்டார். அதனால் அவர் வீட்டுத் திருமணத்தையே உறவினர்பகிஷ்கரித்துவிட்டனராம்!

அரசியல் இங்கு எந்த அளவுக்கு இருக்கிறதென்று பார்த்தீர்களா? வெற்றியடைந்த அபேட்சகரும் தோல்வியடைந்த அபேட்சகரும்தான் இந்த 'உறவு'முறையைக் காப்பாற்ற வேண்டும். பெருந்தன்மையுடன் அவர்கள் மட்டுமல்ல கட்சித்தலைவர்களும் 'அரசியல் வேறு, தனிப்பட்ட நட்புவேறு' என்பதைச் செயலில் காட்ட வேண்டும். முன்வருவார்களா?

* * *

யாழ்ப்பாண நகர் மேயர்களை ஏற்றி இறக்குவதில் பிரசித்தி பெற்றது. சென்ற சில மாதங்களாக இந்த 'கல்யாணங்கள்' நடைபெறவில்லை. பொதுத்தேர்தல் முடிந்துவிட்டதால் இப்பொழுது 'மேயர் பதவி இறக்கம் ஏற்றத்தில் சிலர் கவனஞ்செலுத்திவருகின்றனராம். விரைவில் மாநகரசபைக் கூட்டத்தில் இதற்கான 'குரல்' ஒலிக்கக்கூடும்.

* * *

சாந்தாவைச்சேர்ந்த மாணவர்கள் பூதானத்தலைவர் விநோபாஜியை பவனூர் ஆசிரமத்தில் சந்தித்து சில கேள்விகள் கேட்டார்கள், அதற்கு விநோபாஜி அளித்த பதில்:-

இன்றைய கல்வியில் எந்த விதமான குறிக்கோளும் இல்லாமல் இருக்கிறது. கல்வியில் ஆன்மீகமும் விஞ்ஞானமும் இணைந்திருக்கவேண்டும், அப்போதுதான் கல்வி கற்பதில் மாணவர்களுக்கு உற்சாகம் ஏற்படும்.

கடுமையான கட்டுப்பாட்டினால் மாணவர்களுக்குப் பலன் ஏற்படாது. ஏனெனில் அதனால் மாணவர்கள் பயந்தாங்கொள்ளியாகிறார்கள். அன்பின் மூலமும் சாமர்த்தியத்தின் மூலமும் மாணவர்களின் உள்ளங்களை வெற்றிகொள்ளவேண்டும்.

* * *

பாவேயின் இந்தக் கருத்து இலங்கைக்கும் பொருந்தும். நமது புதிய கல்வி அமைச்சருக்கு இது அர்ப்பணம்.

— ஊர்சுற்றி.

## அடுத்தமாதத்தில் 'கோட்டா' கிடைக்கும்

பம்பலப்பிட்டி, புதன்

உள்நாட்டு கைத்தொழில் அபிவிருத்தியில் ஈடுபட்டிருப்பவர்கள் அவர்களுக்கு வேண்டிய மூலப் பொருளை இறக்குமதிசெய்வதற்கான 'கோட்டாவை' அரசாங்கம் மே மாதத்தில் வழங்கவிருப்பதாக அறியப்படுகிறது.

இதுபற்றி தற்பொழுது கைத்தொழில் மந்திரி விரிவான விபரங்களை ஆராய்ந்துகொண்டிருப்பதாகவும் அதன் பின்னர் வேண்டிய மாற்றங்களைச் செய்வார் என்றும் தெரிய வருகிறது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# "நிபந்தனையற்ற பேச்சுக்கு தயாராய் இருக்கிறோம்

## சரியான உத்தரவாதம் இன்றி வெளியேற மாட்டோம்"

— ஜனாதிபதி ஜோன்ஸன்

### வியட்நாமில் அமெரிக்காவை தோற்கடிக்கமுடியாது என்கிறார்

பால்டிமோர், ஏப்ரல் 8

வியட்நாமில் அமைதியை ஏற்படுத்த நிபந்தனையற்ற முறையில் பேச்சுவார்த்தை நடத்த அமெரிக்கா தயாராய் இருக்கிறது என ஜனாதிபதி ஜோன்ஸன், ஜோன் ஹொப்கின்ஸ பல்கலைக் கழகத்தில் பேசியபோது தனது பிரதான கொள்கை அறிக்கையில் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் உரை நாடெங்கும் டெலிவிஷன் வானொலிமூலம் அஞ்சல் செய்யப்பட்டது.

'வியட்நாம் போர் தென் கிழக்காசியா முழுவதிலும் பரவுவதன்மூலம் பல்லாயிரக் கணக்கானோர் கொல்லப்படுவதை அமெரிக்கா விரும்பவில்லை. அமெரிக்காவைப் பொறுத்தவரை விரைவில் இதற்கோர் தீர்வு காண்பதே உத்தேசம்" என்றும் ஜோன்ஸன் அறிவித்தார்.

தென்வியட்நாமின் சுதந்திரமும் தென்கிழக்காசியாவின் சுதந்திரமும் பத்திரமாய் இருக்க வேண்டும் என்பதில் உருப்படியான உத்தரவாதத்தை அமெரிக்கா பற்றி நிற்கும் என்றார் ஜோன்ஸன்.

"கம்யூனிஸ்டுகள் தென்வியட்நாமில் உவமையற்ற காட்டுமிராண்டித்தனத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். இது நிறுத்தப்படும்வரை அமெரிக்கா தென் வியட்நாமிலிருந்து வாபஸ் பெறாது. அங்கு அமெரிக்காவைத் தோற்கடிக்கவும் முடியாது" என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

கம்யூனிஸ்டுகளின் நாசவேலை அதிகரித்ததால்தான் அமெரிக்கத் தாக்குதலும் அதிகரித்தது என்றும் அவர் கூறினார்.

தென்கிழக்காசியாவில் உத்தேச ஐ. நா. கூட்டுறவு அபிவிருத்திக்கு அமெரிக்காவின் சார்பாக 100 கோடி டாலரைத் தாம் காங்கிரசிடம் கோரப் போவதாயும் ஜோன்ஸன் கூறினார்.

## ரஷ்ய ஆயுதங்கள் வடவியட்நாம் செல்கின்றன

### சீன வழியாகச் செல்ல அனுமதி

வார்ஸா, ஏப்ரல் 8

அமெரிக்கா வடவியட்நாம்மீது நடத்தும் ஆக்கிரமிப்பை ரஷ்யா அலட்சியம் செய்ய முடியாது என ரஷ்யப் பிரதமர் கோஸிஜின் போலந்தில் நடைபெற்ற தொழிலாளர் கூட்டமொன்றில் பேசும்போது எச்சரிக்கை விடுத்தார்.

அமெரிக்காவின் தாக்குதலை அவர் கண்டித்ததுடன், சாத்தியமான சகலவழிகளிலும் வடவியட்நாமுக்கு ரஷ்யா உதவும் என்றும் குறிப்பிட்டார்.

"வியட்நாம் நிலைமையின் அபாயத் தன்மையை குறைவாக மதிப்பிட முடியாது. வியட்நாம் மக்களின் சுதந்திரத்தை அமெரிக்கா கழுத்தை நெரித்துக் கொல்ல முயல்கிறது" என்றும் திரு. கோஸிஜின் கூறினார்.

இதற்கிடையில் ரஷ்ய ஆயுதங்கள் சீனவழியாக வடவியட்நாம் சென்று கொண்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. முன்பு இந்த ஆயுதங்கள்செல்வதை சீனா தடைசெய்திருந்தது. தற்போது ஏற்பட்டுள்ள உடன்பாட்டின்கீழ் ரஷ்ய ஆயுதங்களை சீனப்பிரதேசம் வழியாகச் செல்ல பீகிங் அனுமதித்துள்ளது.

## 30 அமெரிக்க விமானங்கள் சுடப்பட்டனவாம்

### வியட்காங் தகவல்

சைகோன், ஏப். 8

தென் வியட்நாமில் ஆயுத ரயில் ஒன்றை வியட்காங்கினர் வெடிவைத்துத் தகர்த்துவிட்டதாக சைகோன் செய்திகள் தெரிவிக்கின்றன. இதன் விளைவாக மூவர் கொல்லப்பட்டனர்.

இதற்கிடையில் அமெரிக்க விமானங்கள் வடவியட்நாமிலும், தென் வியட்நாமிலும் உள்ள வியட்காங் இலக்குகளையும் நேற்றும் தாக்கின.

சமீபத்தில் விமானத்தாக்குதலில் 30 அமெரிக்க விமானங்களைச் சுட்டுவீழ்த்தியதாய் வடவியட்நாம் தெரிவித்திருக்கிறது. ஒரு அமெரிக்கர் கைதுசெய்யப்பட்டாராம்.

—

### பிரிட்டிஷ் பட்ஜெட்

லண்டன், ஏப் 8

பிரிட்டிஷ் நிதிமந்திரி திரு. ஜேம்ஸ் கெலகன் காமன்ஸ் சபையில் வெளியிட்ட 1965-66-ம் ஆண்டுக்கான பட்ஜட்டின்படி மொத்த வருமானம் 880, 20, 00, 000 பவுன்கள், செலவு 84, 82, 00, 000 பவுன்கள். மிச்சம் 88,00,00,000 பவுன்கள்.

### இனப்பகையுடன் பிரிட்டன். போர்

லண்டன், ஏப். 8

பிரிட்டனில் இனப்பாரபட்சம், இனப் பகை ஆகியவற்றை அனுஷ்டிப்பதை கடும் குற்றமாக்கும் மசோதா பார்லிமெண்டில் தாக்கல்செய்யப்பட்டிருக்கிறது. பொதுஇடத்தில் இவ்வாறு நடந்துகொள்பவர்களுக்கு அபராதமும் சிறைத்தண்டனையும் விதிக்கும்.

### மோசமான பட்ஜட்டாம்

லண்டன், ஏப். 8

நேற்று சமர்ப்பிக்கப்பட்ட பிரிட்டிஷ் பட்ஜட் அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் வரவேற்கப்பட்டது; எனினும் பிரிட்டிஷ் கன்சர்வேட்டிவ் கட்சியின் சார்பாகப் பேசிய திரு. ஹீத் இதை மோசமான பட்ஜட் என வருணித்தார்.

—

### இந்தியா வரவேற்பு

புதுடில்லி, ஏப். 8

ஆசிய—ஆபிரிக்க மகாநாட்டுக்கு மேலும் பல நாடுகளை அழைக்கவேண்டுமென்று அல்ஜீயர்ஸில் செய்த முடிவை இந்தியா வரவேற்றிருக்கிறது.

—

### பூட்டோ திருப்தி

மாஸ்கோ, ஏப். 8

பாகிஸ்தான் ஜனாதிபதி அயூப்கானுக்கும், ரஷ்யத் தலைவர்களுக்குமிடையே நடைபெற்ற பேச்சுக்கள் மிகவும் திருப்திகரமானவை என வெளிநாட்டுமந்திரி திரு. பூட்டோ கூறினார்.

—

### ஏர்லிபேர்ட்

கேப்கென்னடி, ஏப். 8

அமெரிக்கா அனுப்பிய "ஏர்லிபேர்ட்" என்ற வர்த்தக கிரகம் நேற்று டெலிவிஷன் வர்ணப்படங்களை அனுப்ப ஆரம்பித்தது.

### மென்ஸிஸுக்கு அழைப்பு

சிட்னி, ஏப்ரல் 8

ஆஸ்திரேலியப்பிரதமர் திரு ராபர்ட் மென்ஸிஸை இந்தியா வருமாறு திரு. சாஸ்திரி அழைத்திருப்பதாய் இந்திய உணவுமந்திரி சுப்பிரமணியம் சிட்னியில் கூறினார்.

—

### உ. பி.யில் 2 புதிய பல்கலைக்கழகம்

புதுடில்லி, ஏப்ரல் 8

கான்பூரிலும் மீரத்திலும் இரு பல்கலைக்கழகங்களை அமைக்கும் மசோதா ஒன்றை உத்தர பிரதேச சட்டசபை அங்கீகரித்திருக்கிறது.

—

### மக்கா முஸ்லிம் மகாநாடு

மக்கா, ஏப்ரல் 8

அடுத்த வாரம் மக்காவில் நடைபெறவிருக்கும் அகில உலக இஸ்லாமிய மகாநாட்டுக்கு இந்தியாவின் சார்பாக மூவர் தூதுகோஷ்டியொன்று செல்கிறது. முன்னாள் டில்லி மேயர் திரு. நூர்தீன் அஹமது இக்கோஷ்டிக்குத் தலைமை வகிப்பார்.

இந்த மகாநாட்டில் ஷே[illegible] அப்துல்லாவும் கலந்துகொ[illegible] கிறாரென்பது குறிப்பிட[illegible] கது.

—

### ரஷ்யா—பா[illegible] ஒப்பந்த[illegible]

மாஸ்கோ[illegible]

பாகிஸ்தானில்[illegible] திக்கு ரூ. 15 [illegible] வழங்கும் ஒப்பந்[illegible] கைச்சாத்திட்டி[illegible] ஆண்டு கலாச[illegible] ஒப்பந்தமொன்[illegible] திடப்பட்டிருக்[illegible]

—

### கலாசார [illegible]

மாஸ்[illegible]

1965-66ம் ஆ[illegible] [illegible]

## மே. ஜெர்மன் பார்லிமெண்டுக்கு மேல் ரஷ்ய மிக் விமானம்

### அமெரிக்கா கண்டனம்

வாஷிங்டன், ஏப். 8

வாஷிங்டனிலுள்ள அமெரிக்கத் தூதரை அமெரிக்க இலாகா அழைத்து பெர்லின் மீது ரஷ்ய விமானங்கள் ஆத்திரமூட்டும் நடவடிக்கையில் நடந்து கொண்டது பற்றி ஆட்சேபனை தெரிவித்துக் கொண்டது.

உதவி வெளிநாட்டு மந்திரி திரு. ஜார்ஜ் பால் 20 நிமிடங்கள் அவருடன் பேசினார்.

நேற்று மேற்கு பெர்லினுக்கு மேலே ரஷ்ய ஜெட் விமானங்கள் பறந்தது அபாயகரமானது என்றும், ஆத்திரமூட்டக் கூடியது என்றும் அமெரிக்கா ஆட்சேபித்திருக்கிறது.

மேற்கு ஜெர்மன் பார்லிமெண்ட் கூடிய ஒரு சில நிமிஷத்தில் அக்கட்டிடத்தின் உச்சியில் சிலநூறு அடிகளுக்கு மேல் ஒரு விமானம் பறந்தது என்றும், இதர மூன்று மிக் விமானங்கள் நகரின் பல பகுதிகளிலும் ஒலியைவிட வேகமாகப் பறந்தன என்றும் அறிவிக்கப்படுகிறது. அவைகள் பீரங்கிகளால் சுட்டதாயும் இதனால் சில கட்டிடங்களின் ஜன்னல்களும், கூரைகளும் நொருங்கின என்றும் அறிவிக்கப்பட்டது.

நேற்று மீண்டும் மேற்கு பெர்லின் மேற்கு ஜெர்மனி சாலைப் போக்குவரத்தை கிழக்கு ஜெர்மனி பல மணிநேரம் தடைசெய்தது.

இவ்விதச் செயலை உடன் நிறுத்துமாறு மேற்கு நாடுகள் கேட்டுக் கொண்டிருக்கின்றன.

## "சுதந்திரத்துக்கு உத்தரவாதம் இருக்கும்வரை வெளியேறோம்"

—பண்டி

வாஷிங்டன், ஏப். 8

தென் வியட்நாம் புதிய ஹானோய் அரசாங்கத்தின் போக்கில் மாறுதல் எதையும் காண முடியவில்லை என கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதி ஜோன்ஸனின் விசேஷ ஆலோசகர் திரு பண்டி டெலிவிஷன் பேட்டி ஒன்றில் கூறினார்.

தென் கிழக்காசியாவில் குழப்பங்களைத் தவிர்க்கும் முயற்சியில் அமெரிக்கா முன்னணியில் நிற்கிறது என்றும் அவர் கூறினார்.

"வியட்நாமில் ஆக்கிரமிப்பை முடிவுக்குக் கொண்டு வருவதில் அமெரிக்கா குறுக்கே நிற்கவில்லை என்றும் அவர் கூறினார்.

"தற்போது இவ்விதமாகத் தொடர்பு கொள்ள எவருமில்லை. வட வியட்நாம் அரசாங்கமும், சீன அரசாங்கமும் அமெரிக்கர் தென் வியட்நாமிலிருந்து வெளியேறும் வரை பேச்சுவார்த்தை எதுவும் இருக்காது எனக் கூறுகின்றன. ஆனால் இதுசாத்தியமல்ல தென கிழக்காசியா பாதுகாப்பாகவும், சுதந்திரமாகவும் இருக்க கௌரவமான உடன்பாடு ஒன்று காண்பதே அமெரிக்காவின் உத்தேசம்" என்றும் பண்டி கூறினார்.

——

### இ. போ. ச.வின் எச்சரிக்கை

கொழும்பு, வியாழன்

பிரயாணிகளிடமிருந்து கட்டணம் வசூலிக்காமலோ அல்லது குறைந்த கட்டணம் வசூலித்தாலோ இ. போ. ச.வின் கட்டமையாந்தும் கண்டக்டர்கள் மீதும், சாரதிகள் மீதும் கடும்நடவடிக்கை எடுக்கப்படுமென இ. போ. ச. நிர்வாகம் தெரிவித்துள்ளது. இதே நேரத்தில் டிக்கெட் இல்லாமல் பஸ்ஸில் பிரயாணம் செய்பவர்களுக்கும் தண்டம் விதிக்கப்படுமென்பதையும் சபையார் பொதுமக்களுக்குத் ஞாபகப்படுத்தியுள்ளனர்.

வழமையான கட்டணத்துக்குக் குறைவான கட்டணத்தை கண்டக்டர்கள் வசூல்செய்தது காரணமாக நாளாந்த வருமானம் 80,000 ரூபா வீதம் குறைந்துள்ளது.

### கேரளம் பாதிக்காது

திருவனந்தபுரம், ஏப்ரல் 8

கேரளத்தில் ராஷ்டிரபதி ஆட்சியின்போது அபிவிருத்தி திட்டங்கள் பாதிக்கப்படமாட்டாதென கவர்னர் ஜேயின் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஊழியர்களை குறைத்து மிகுதிப் பேரை வெளியேற்றுக"

## 3 கான்சல்களுக்கு வெளி விவகார அமைச்சு உத்தரவு

கொழும்பு, வியாழன் வடகொரியா, வடவியட்னாம், கிழக்கு ஜெர்மனி ஆகி நாடுகளின் தூதராலய உத்தியோகஸ்தர்களின் எண்ணிக்கையை உடனடியாகக் குறைக்கும்படி வெளிநாட்டமைச்சு அந்த நாடுகளின் தூதர்களைக் கேட்டிருக்கிறது.

வடகொரியாவும், வடவியட்னாமும் கான்சல் ஜெனரல்பதவியுடன், ஒரு அதிகாரியை மட்டும் வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. கிழக்கு ஜெர்மனி ஒரு கான்சல் ஜெனரலையும் ஒரு அதிகாரியையும், மற்றும் இரு உத்தியோகஸ்தர்களையும் வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு மேலான எண்ணிக்கை கொண்ட அனைவரும் ஒருவாரத்தில் வெளியேற வேண்டும் என உத்தரவிடப்பட்டிருக்கிறது.

கான்சல் உறவு பற்றிய வியன்னா மகாநாட்டின் 30வது விதியின் கீழ் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

தங்கள் உத்தியோகஸ்தர்களின் தற்காலிக வாசபர்மிட்டை மேலும் 6 மாதங்களுக்கு நீடிக்குமாறு வடவியட்னாம் தூதர் ஏற்கனவே விடுத்த வேண்டுகோளை வெளிநாட்டு அமைச்சு நிராகரித்துவிட்டது.

## கி. ச. பாராட்டு

புங்குடுதீவு, வியா

புங்குடுதீவு கிராமசபையின் மாதாந்தக்கூட்டம் அதன் தலைவர் திரு. கு. வி. தம்பித்துரை தலைமையில் நடைபெற்றபோது தேசிய அரசாங்கத்துக்குப் பாராட்டுத் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

## 'பரஸ்பர ஒற்றுமையே எமது கொள்கை'

யாழ்ப்பாணம், வெள்ளி

தென்கிழக்காசியாவிலுள்ள சகல மக்களும் சுதந்திரமாகவும் ஜனநாயகத்துடனும் வாழ வேண்டுமென்பதற்காகவும் உலகத்திலேயே செல்வமிக்க பகுதியான தென்கிழக்காசியாவிலுள்ள ஒவ்வொரு நாடும் மற்றைய நாடுடன் எல்லா விதத்திலும் தொடர்புகொள்ள வேண்டும் என்ற நோக்கத்திற்காகவும் தான் வடவியட்னாமுடன் போராட்டம் நடத்துகிறோம்" என்று அமெரிக்கப் பிரமுகர் திரு. ஜோன் ரி. கோல்டன் நேற்றுமாலை யாழ்ப்பாணம் அமெரிக்க கலாச்சார நிலையத்தில் தென்கிழக்காசியாவில் அமெரிக்காவின் கொள்கைகள் என்னும் விஷயம்பற்றி உரைநிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

## இருவர் கைது

முன்னாள் பஞ்சாப் முதன் மந்திரி திரு. கெய்ரோனைக் கொலை செய்தது சம்பந்தமாக இருவர் கைது செய்யப்பட்டிருப்பதாய் லோகசபை அறிவிக்கப்பட்டது.

# கட்சித்தலைவர்களுடன் பிரதமர் சாஸ்திரி ஆலோசனை

## பாகிஸ்தான் ஊடுருவல் பற்றி

புதுடில்லி, ஏப் 8

குஜராத்திலுள்ள கட்ச் பகுதியில் பாகிஸ்தான் ஊடுருவலை அப்புறப்படுத்தி, இந்தியாவின் நிலையை பலப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாய் உள்நாட்டு மந்திரி திரு நந்தா லோகசபையில் தெரிவித்தார்.

"பாகிஸ்தானியர் அங்கு ஓரிடத்தில் 2000 யார் தூரமும், மற்றோரிடத்தில் 1800 யார தூரமும் ஊடுருவி சட்டவிரோதமாக இரு காவல்நிலைகளை அமைத்திருக்கிறார்கள். இவ்விஷயத்தில் ராஜீய முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறோம். மறுபக்கம் என்ன நடக்கிறது என்பதை இந்தியா அறிந்திருக்கிறது" என்றும் நந்தா குறிப்பிட்டார்.

இதற்கிடையில் கட்சிநிலைமை பற்றி பிரதம மந்திரி திரு. லால்பகதூர் சாஸ்திரி 12 அரசியல் கட்சித் தலைவர்களையும் ஒரு மகாநாட்டுக்கு அழைத்து பேச்சுக்கள் நடத்தினர்.

## பஸ்சேவை பற்றி மகஜர்

பருத்தித்துறை, வியா

பருத்தித்துறை இ. போ. ச. டிப்போவினால் நடாத்தப்படும் பஸ் சேவையில் கொடிகாமம் சாவகச்சேரி நோக்கிச் செல்லும் பஸ்களில் சிலவற்றை கெல்லியடி அரசடிச் சந்தியால் உடுப்பிட்டுக்கூடாகச் செல்லும்படி சேவைகளை விஸ்தரிக்குமாறு டிப்போ அதிகாரிகட்கு அப்பிரதேச மக்களும் கரவெட்டி கிராம முன்னேற்றச் சங்கமும் மகஜரொன்றை அனுப்பிவைத்திருப்பதாகத் தெரிய வருகிறது.

இம்மகஜரின் பிரதியொன்று யாழ் பிரதேச இ. போ. ச. முகாமையாளருக்கும் அனுப்பி வைத்திருப்பதுடன் இதுவிடயமாக தூதுகோஷ்டியொன்று நேரில்சென்று அவரைப் பேட்டி காணவும் முடிவுசெய்திருப்பதாகத் தெரியவருகிறது.

## வாலிபர் கடமை பற்றி எம். பி.

உடுப்பிட்டி, வியாழன்

"பின்தங்கிய ஒவ்வொரு சமூகங்களையும் முன்னேற்றம் பெறுப்பு வாலிபர் கையிலே தான் தங்கியுள்ளது. எந்த ஒரு இயக்கத்திலும் வாலிபர்களின் சக்திதான் மேலோங்கி நிற்கிறது. தத்தம் கிராமங்களிலுள்ள சனசமூகநிலையங்களையும், நூலகங்களையும் முன்னேற்றவேண்டியது வாலிபர்களின் கடமை சனசமூகநிலையத்தின் முன்னேற்றத்திலிருந்து அவ்வூரின் சிறப்பைக் கணிக்கமுடியும்".

இவ்வாறு உடுப்பிட்டித் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. மு. சிவசிதம்பரம் வதிரி சனசமூகநிலைய வாலிப முன்னணியின் சார்பில் கதிர்காமகோவிலடியில் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

செல்வன் உமாகாந்தன், க. தவராசா ஆகியோரும் திரு.சிவசிதம்பரத்தின் சேவையைப் பாராட்டிப்பேசினர். வாலிபமுன்னணியின் சார்பில் திரு. சிவசிதம்பரத்துக்கும் சபையினருக்கும் தேநீர் விருந்து அளிக்கப்பட்டது.

## தங்கப்பதக்கம்

உடுப்பிட்டி, வியாழன்

நவிண்டில் காவலன் விளையாட்டுக்கழகத்தார் தமது 8-வது நிறைவுவிழாவையொட்டி இம்மாதம் 12-ந் திகதி விசேஷ 10 மைல் ஓட்டப் போட்டியொன்றை நடாத்துகின்றனர். காவலர் மட்த்தடியிலிருந்து ஆரம்பமாகும் இப் போட்டியை உடுப்பிட்டி யாளர் திரு. என். நடராசா ஆரம்பித்துவைப்பார். போட்டியில் வெற்றிபெற்றவருக்கு தங்கப்பதக்கம் வழங்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.


எனக்கு
மிகவும்
பிரியமானது



CEYLON CHOCOLATES LTD

கன்டொஸ்

...ர் சொக்கலேற்று



REGAL — JAFFNA
NOW SHOWING
Sexy Night Shows!
AROUND THE WORLD
IN
90 NIGHTS
(Totalscope - Color)
[ ADULTS ONLY ]



இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) கெப்பிட்டல் (கொட்டாஞ்சேனை)

நவா (கும்பனித்தெரு) விஜயா (மட்டக்களப்பு) மொடர்ன் (பண்டாரவளை)

விஜிதா (ஹட்டன்) தீவொளி (நுவரேலியா) ஜூபிட்டர் (குருநாகல)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி மாலை 6-30, 9-30

புரட்சி நடிகர்

எம். ஜி. ராமச்சந்திரன்
சாவித்திரி

மற்றும் பலர் நடித்த

வேட்டைக்காரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுத்துறைக்கு தனி அமைச்சு

## இலங்கையின் தரத்தை உயர்த்த நடவடிக்கை

கொழும்பு, வியாழன்

இலங்கையில், விளையாட்டுத் துறைகளுக்கு ஊக்கம் அளிக்கும் பொருட்டு தனியாக ஒரு அமைச்சு அமைக்கப்படவிருக்கிறது. இதற்கான முயற்சிகளை தேசிய சேவைகள் மந்திரி மேற்கொண்டு வருகின்றார்.

இலங்கையின் விளையாட்டுத் துறையை அபிவிருத்தி செய்து விளையாட்டுகளுக்கும் வீரர்களுக்கும் ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் வகையில் சிறந்த நடவடிக்கைகளை மேற் கொள்ளவே இந்தப் புதிய அமைச்சு அமைக்கப்படவிருக்கிறது.

தற்பொழுது இங்கு, பல்வேறு விளையாட்டுச் சங்கங்கள் இருக்கின்றன. இந்தச் சங்கங்கள் ஆண்டுதோறும் பல போட்டிகளை நடத்தி விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கம் அளித்து வருகின்றன. இங்குள்ள விளையாட்டு வீரர்களை வெளிநாடுகளில் நடைபெறும் போட்டிகளுக்கு அனுப்புவதிலும் சில சங்கங்கள் ஈடுபட்டு வருகின்றன. ஆனால் இதற்கு விளையாட்டுச் சங்கமே அதிக பணத்தைச் செலவழிக்க வேண்டியிருக்கிறது. சில சங்கங்களின் நிதி நெருக்கடி காரணமாக, சிறந்த வீரர்களைக் கூட வெளிநாடுகளுக்கு அனுப்ப முடியாது ஏற்படுகின்றது. இதனைத் தவிர்த்து, விளையாட்டுத் துறைக்கு போதிய ஊக்கம் அளித்து வீரர்களை உற்சாகப் படுத்த புதிய அமைச்சு நடவடிக்கை எடுக்கும் எனத் தெரியவருகின்றது.

இந்த அமைச்சு நிறுவப்படும் பட்சத்தில் இலங்கையின் விளையாட்டுத் தரம் ஓரளவு உயர்வு பெறலாம் என நம்பப்படுகின்றது.

## கிளிநொச்சி வட்டார பாடசாலைகள் கதம்ப விழா முடிவுகள்

கிளிநொச்சி, வியாழன்

"மாணவர்கள் புத்தகப் படிப்பை மட்டும் நம்பியிராது நாடகம், சங்கீதம், நடனம், தேகாப்பியாசம் போன்ற கலைகளையும் பயின்று நாட்டில் கலைகளையும் வளரச்செய்வதற்கு முன்மாதிரியாகத் திகழ வேண்டும்" என்று கிளிநொச்சி சண்முகா பட்மாளிகையில் நடைபெற்ற கிளிநொச்சி வட்டாரப் பாடசாலைகளின் கதம்பவிழாவுக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் வடபிரதேச உதவி வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம் குறிப்பிட்டார்.

இவ்விழாவுக்கு ஏற்ற ஒழுங்குகள் யாவற்றையும் கிளிநொச்சிப்பகுதி வித்தியாதரிசி திரு. கனகசபாபதி செய்திருந்தார்.

வெற்றிபெற்ற பாடசாலைகளுக்கு கிளிநொச்சி கீரப்பாசனப்பகுதித் தலைவர் திரு. சி. ஜெயசிங்கத்தினால் பரிசில்களும் பாராட்டுப் பத்திரங்களும் வழங்கப்பட்டன.

வெற்றிபெற்றோர் விபரம் வருமாறு:

கீழைத்தேய நடனம்: கிளிநொச்சி சென். திரேசா, குமரபுரம் இ. த. க. பாடசாலை, பளை மகாவித்தியாலயம்.

அபிநயப்பாட்டு: கண்டாவளை இ. த. க. பாடசாலை, கிளிநொச்சி இ. த. க. பாடசாலை, வட்டக்கச்சி தெற்கு அ. த. க. பாடசாலை.

கிராமிய நடனம்: அல்லிப்பளை த. க. பாடசாலை, கிளிநொச்சி இ. த. க. பாடசாலை, ஆனையிறவு அ. த. க. பாடசாலை.

கர்நாடக சங்கீதம்: கிளிநொச்சி இ. த. க. பாடசாலை, கிளிநொச்சி சென். திரேசா பாடசாலை, கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

கிராமிய நடனம்: முரசுமோட்டை முருகானந்தா பாடசாலை, கிளிநொச்சி சென். திரேசா பாடசாலை, பளை மகா வித்தியாசாலை.

## குடிசைவாசிகளுக்கு வீட்டு வசதி

கொழும்பு, வியாழன்

கொழும்பு நகரில் குடிசைகளில் வாழும் ஏழைமக்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் திட்டமொன்றை தொழில் வீடமைப்பு வேலைவாய்ப்பு மந்திரி திரு. எச். எம். முகம்மது தயாரித்துள்ளார். இப்பொழுது குடிசைகள் இருக்கும் அதேயிடங்களில் குறைந்த செலவில் வீடுகள் கட்டிக் குறைந்த வாடகைக்கு கொடுப்பதென்பதே மந்திரியின் திட்டமாகும். அரசாங்க நிலங்கள் அல்லாத தனிப்பட்ட நிலங்களில் குடிசைகள் இருக்குமானால் அந்த நிலத்தை அரசாங்கம் சுவீகரித்து வீடுகளை அமைக்கும்.

தனிப்பட்ட சிலர் வாடகைக்கு விடுவதற்கென அமைத்துள்ள வீடுகளை வாங்கி வாடகைக்குக் கொடுக்கவும் மந்திரி உத்தேசித்துள்ளார்.

## மாணவ ஆசிரியர்

கொழும்பு, வியாழன்

1963-ம் ஆண்டில் மாணவ ஆசிரியர் பரீட்சையில் சித்தியடைந்தும் வேலையில்லாமல் இருக்கும் 200 பேர்களுக்கு வேலைவசதி அளிக்கத் தான் நடவடிக்கை எடுக்கவிருப்பதாக கல்வி மந்திரி திரு ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்ல தெரிவித்துள்ளார். இவர்கள் வர்த்தக பாடங்களில் தகுதி பெற்றிருப்பதால் வர்த்தக மாணவ ஆசிரியர்களாக நியமனம் பெறுவர்.

## பொலிஸ அதிகாரிகள் இடமாற்றம்

கொழும்பு, வியாழன்

கொழும்பு நகர பொலிஸ்பகுதியைச் சேர்ந்த இரு உதவி பொலிஸ் சுப்பிரின்டென்டுகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

குற்றப்பிரிவைச்சேர்ந்த திரு ஏ. மகேந்திரன், மேற்குப்பகுதியைச் சேர்ந்த திரு. எஸ். வாமதேவன் ஆகியோர் முறையே அநுராதபுரம், நுவரெலியா ஆகிய இடங்களுக்கு இடமாற்றம்செய்யப்பட்டுள்ளனர்.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு (9-4-65)

(செய்திகள் காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 பாமாலை, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 பக்திப் பாடல்கள் — அப்பிகாதாமோதரம், 8-00 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம் 1-00 கதம்ப இசை.

மாலை: 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நாதஸ்வரம் — பி. சண்முகசுந்தரம், 6-15 கிராம சஞ்சிகை, 6-45 ஞானஞ்சலி 7-15 வி. நடேசன் பாட்டு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 பேச்சு — 'நாடும் நாமும்' 9-30 நேயர் விருப்பம், 10-00 புல்லாங்குழல், 10-15 தேர்ந்த இசை.

## பாடசாலைகள் சங்கீத விழா

பருத்தித்துறை, வியாழன்

உடுப்பிட்டித் தொகுதித் தமிழ்ப் பாடசாலைகளின் தலைமை ஆசிரியர்கள் சங்கம் வட்டார வித்தியாதரிசி திரு. வி. தர்மசங்கரி தலைமையில் நடைபெற்றபோது எதிர்வரும் ஜூன்மாதம் 4-ம், 5-ம் திகதிகளில் வட்டாரப் பாடசாலைகளின் வருடாந்த சங்கீத விழாவை நடாத்துவதென முடிவுசெய்யப்பட்டதுடன் அதற்கான உபசபை ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

இவ்வட்டார பாடசாலைகட்கிடையே வருடாந்த மெய்வல்லுநர் போட்டியொன்றை ஜூன் மாத இறுதிவாரத்தில் நடாத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதெனவும் முடிவு செய்யப்பட்டதாகத் தெரிய வருகிறது.

## வான் விபத்து

கோண்டாவில், வியா.

பலாலி ஆசிரியகலாசாலையில் சாரண ஆசிரியராகப் பணியாற்றும் திரு. ஆறுமுகம் சுப்பிரமணியம் நேற்று மாலை சைக்கிளில் வந்துகொண்டிருந்தபோது வான் ஒன்று மோதுண்டு படுகாயத்துக்குள்ளான சம்பவம் கோண்டாவில் முத்தட்டு மடத்துக்கு அருகாமையில் இடம்பெற்றது. இவர் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் உடனடியாக அனுமதிக்கப்பட்டுள்ளார். கோப்பாய் பொலிசார் நடவடிக்கை எடுத்துவருகின்றனர். திரு. சுப்பிரமணியம் இப்பொழுது குணமடைந்து வருவதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் அறிவிக்கின்றன.

## சிரேஷ்ட மாணவர் சங்கக் கூட்டம்

நீர்கொழும்பு, வியாழன்

சிரேஷ்ட பரீட்சையில் சித்தியெய்திய தமிழ் மாணவ மாணவிகளுக்கு ஆசிரியர் தொழில் அல்லது ஏதாவது அரசாங்க உத்தியோகம் கொடுக்கப்படவேண்டுமென்றும் அவர்கள் ஆசிரிய கலாசாலைப் பரீட்சை எடுப்பதற்கு அனுமதிவழங்கப்படவேண்டுமென்றும் அரசாங்கத்தைக் கோரும் தீர்மானங்கள் நீர்கொழும்பு அர்ச் மரியாள் கல்லூரி சிரேஷ்ட மாணவர் சங்கக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

புதுவருட உத்தியோகத்தர்கள் வருமாறு: காரியதரிசி: செல்வி லீஜிபா பெர்னாண்டோ உபகாரியதரிசி: செல்வி மேரி மகிலின், பொருளாளர் செல்வி டொறின் பெர்னாண்டோ.

## புதுவருட உத்தியோகத்தர்கள்

பளை, வியாழன்

வண்ணாங்கேணி சனசமூக நிலையத்தின் வருடாந்த கூட்டம் சென்ற வாரம் நடைபெற்றது. புதுவருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: திரு ச. சின்னத்துரை, உபதலைவர்: திரு. நா. சோமசுந்தரம், காரியதரிசி: திரு செ. அமரசிங்கம், தனாதிகாரி: திரு. இ. நடராசா.

5 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

## மகாபாரதபிரசங்கம்

உடுப்பிட்டி, வியா

சரித்திரப்பிரசித்திபெற்ற சரவை வெல்லன் விநாயகர் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டுப் பத்துத் தினங்களும் முத்தமிழ்மணி திரு. கி. எஸ்- எஸ். மணிபாகவதர் மஹாபாரத விரிவுரை நிகழ்த்திவருகிறார். தினமும் பி-ப 6 மணி தொடக்கம் 10 மணி வரை இவர் விரிவுரைநிகழ்த்துகிறார்.

இத் தொடர்பெருவிழாவுக்கு உடுப்பிட்டி தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. மு. சிவசிதம்பரம் தலைமைதாங்குகிறார்.

## நஷ்டஈடு கிடைக்கும்

பம்பலப்பிட்டி, புதன்

வில்வத்தையில் நடைபெற்ற ரயில்விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு உடனே நஷ்டயீடு வழங்குமாறு போக்குவரத்து மந்திரி ஸ. எல். பி. குருனா நேற்று உத்தரவு பிறப்பித்தார்.

கடந்த ஐந்துமாதகாலமாக இவ்விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் எதுவித நஷ்டயீடும் வழங்கப்படவில்லையென்றும் இத்தகையவர்களுக்கு உடன் நிவாரண உதவி வழங்குவதே ஓரளவு இதற்குப் பரிகாரம் தேடுவதாக இருக்குமென்றும் இவ்வித நிவாரணம் முன்னரேயே வழங்கப்பட்டிருக்க வேண்டுமெனவும் மந்திரி தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க விரைவான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு மந்திரி தமது நிரந்தரக் காரியதரிசி திரு. ஏ. எல். கொஹோபன் விக்கிரமவுக்கு அறிவித்தல் செய்துள்ளார்.

மேற்படி விபத்தில் 26 பேர் உயிரிழந்தனர். சுமார் 100 பேர் காயமடைந்தனர். இந்த ரயில் விபத்து சென்ற வருடம் அக்டோபர் 17-ந் தேதி நடைபெற்றது.


**SALE**

Refrigerator 4.5 C F Rs 850/- for quick sale "Hilshear" metal cutter most useful tool in a workshop Rs 175/- Step laddler Rs 45/- Car jack Rs. 25/.-Six violt horn-Rs 16/- blow lamp Rs 10/- Vacuum jar with drier-Rs 25/- Bench vice-Rs 20 - Strong leather document case - Rs 45/-

67, Brown Road, neeravl-ady Jaffna. 33


## தொடர்ந்து இயங்கும்?

அக்கரைப்பற்று, வியாழன்

கல்லோயா அபிவிருத்தி சபை முன்னர் தெரிவிக்கப்பட்டதுபோல் மூடப்படமாட்டாதென அறியவருகிறது. இவ்வருடம் செப்டம்பர்மாதத்தில் கல்லோயா அபிவிருத்தி சபை மூடப்பட்டால் என்ன செய்வது என்று எண்ணிக் கொண்டிருந்த ஊழியர்கள் இப்பொழுது சிறிது சாந்தி அடைந்துள்ளனர்.


## அறிவித்தல்

தவில் வித்வான் என். எம். சிதம்பரநாதன் கிளாரினெட் கோஷ்டியினரை வரவழைத்துள்ளார். திருவிழாவுக்கும், மங்கள வைபவங்களுக்கும் இக் கோஷ்டியினரை அழைக்க விரும்புவோர் விபரங்களுக்கு: என். எம். சிதம்பரநாதன், குமாரவீதி, மூத்திரைச்சந்தை, நல்லூரில் விசாரிக்கவும். 114

வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 1 ஸ்ரீ 4255 இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் 'பன்ரம் மேஜர்' விற்பனைக்கிருக்கிறது. விபரங்களுக்கு: பி. கந்தையா பத்தர், காவற்குழி கிழக்கு, தச்சன் தோப்பு. 24

பாவித்த இலங்கை முத்திரைகள் விலைக்கு வாங்கப்படும். விபரங்களுக்கு: த. பெட்டி இல 896, கொழும்பு. (P. O. Box: 896, Colombo.) 28

நல்ல நிலையிலுள்ள எஞ்சினும் (Lister $7\frac{1}{4}$ HP) தூள், மா, நெல் அரைக்கும் யந்திரங்களும் விற்பனைக்குண்டு. கலாபவனம், வியாபாரிமூலை, பருத்தித்துறை. 33

பழைய இரும்பு, பித்தளைச் சாமான்களும்; கோழிக்கூடு, வலைக்கம்பி, கோழித்தீன் தட்டுகளும், கோழிக்குஞ்சுக் கூடுகளும் விற்பனைக்குண்டு. 67, பிறவுன் ரோட், நீராவியடி. 33

### தேவை

பிஸ்கட், கேக், பாண் தயாரிக்கத்தெரிந்தவர்கள் தேவை, விண்ணப்பிக்கவும். மு. இராசரத்தினம், 'இலட்சுமி பேக்கரி' அச்சுவேலி. 35

# அருத எண்ணெய்

பல்லாண்டு காலமாக பல்லாயிரக் கணக்கான பாவனையாளர்களுக்குப் பயன் நல்கி வரும் ஒரு அற்புதமான கூந்தல் தைலம்.

அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இந்த எண்ணெய்— அருபதாம் பச்சை எனும் தமிழ் மூலிகையையும், வேறு ஆயுர்வேத மூலிகைகள் நாற்பத்துநான்கினையும் சேர்மானமாகக் கொண்டது.

உஷ்ணமான உடல் உள்ளவர்களுக்கும், உஷ்ணப் பிரதேசங்களில் வசிப்பவர்களுக்கும் அதிசயிக்கத் தக்க பலன் அளிக்கவல்லது! இதனை தலையில் தேய்த்த மாத்திரத்தில்.... கூந்தல் அடர்த்தியாகவும், நீளமாகவும் வளரும். தலைமயிர் உதிர்வதும், நரைப்பதும் நிற்கும். மூளைக்குக் குளிர்ச்சியும், கண்களுக்குப் பிரகாசமும் உண்டாகும். நீங்காத ஜலதோஷமும், பீனிசமும் நீங்கும்.

அதுமட்டுமா?

கண் — தலை — காது — மூக்கு

சம்பந்தப்பட்ட சகல வியாதிகளும் குணமாகும்!

—சிறுவர் முதல் பெரியோர்வரை பாவிக்கலாம்—

தயாரிப்பாளர்:

## பி. எம். திசாநாயக்க

(நான்கு கோவில்களின் தர்மகர்த்தா)

அருத எண்ணெய் அலுவலகம்

கண்டி ரோட், கம்பளை.

யாழ்ப்பாணத்திற்கு ஏகவிநியோகஸ்தர்கள்

## எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

(மருந்து, மருந்துச் சரக்கு, வாசனைத்திரவியங்கள் வியாபாரம்)

53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(தொலைபேசி: 541, 7068)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கைக்கெட்டியது வாய்க்கெட்டுமா?

கொழும்பு, வெள்ளி

மேல்படிப்புக்காக பல்கலைக் கழகத்தில் சேர்ந்துவிட வேண்டும் என்று தங்கள் சக்தி முழுவதையும், நேரம் முழுவதையும் செலவழித்து படிக்கும் மாணவர்கள் லட்சக்கணக்கானோர். ஆயினும் பரீட்சையில் உரியபுள்ளிபெற்று பல்கலைக்கழகத்தில் சேருவோர் நூற்றுக்கணக்கானோரே. இதுவரையும் புகுமுகப் பரீட்சையில் நான்கு பாடங்களில் நாற்பது புள்ளிகளுக்கு கூடுதலாக பெறுபவர்கள் பல்கலைக் கழகத்தில் சேர்க்கப்பட்டார்கள். ஆனால் இம்முறையோ நான்கு பாடங்களில் நற்பது புள்ளிகளுக்கு கூடுதலாகப் பெறும் எல்லோரும் பல்கலைக் கழகத்தில் அனுமதிக்கப்படுவார்கள் என்பது சந்தேகமே!

இலங்கையில் உள்ள மூன்று பல்கலைக் கழகங்களும், பரீட்சையில் வகுக்கப்பட்டுள்ள தகுதியைபெற்ற அத்தனை மாணவர்களையும் உடனடி நடவடிக்கை எடுக்காவிடில் சேர்த்துக்கொள்ளமுடியாது என கல்வி இலாகாவுக்கு அறிவித்துள்ளன.

பல்கலைக் கழகங்களில் இடவசதி போதாது எனவும் வடக்கிலும், தெற்கிலும் இரண்டு புதிய பல்கலைக் கழகங்கள் நிறுவப்படவேண்டும் எனவும் பல்கலைக்கழக உபவேந்தர் முன்னரே கல்வி அமைச்சுக்கு சிபார்சு செய்திருந்தார். உடனடியாக அப்படிச்செய்யமுடியாவிடின் மேலதிகமாக இரண்டு பல்கலைக்கழக விடுதிகள் அமைக்கப்படவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியிருந்தார்.

பரீட்சையில் சித்தியடைந்தபோதிலும், இடவசதியின்மை காரணமாக கைக்கெட்டியும் வாய்க்கெட்டாத நிலைமை உண்மையிலே ஏற்படுமா அன்றி அரசின உரிய நடவடிக்கை எடுத்து அதை நிவர்த்திப்பார்களா என்பதை பொறுத்திருந்தேபார்க்கவேண்டும்.

கடற்படை

# கமிஷன் அறிக்கை செல்லுபடியாகாது

# லெப்டினன்ட் சண்முகம் தொடர்ந்த வழக்கில் நீதிபதி தீர்ப்பு

## 'நீதிபரிபாலனத்தையே அவமதிப்பதாகும்'

கொழும்பு, புதன்

**1960-ம் ஆண்டில் கடற்படை அதிகாரிகளில் சிலர் வெளிநாடு சென்றிருந்த சமயம் நடைபெற்ற சம்பவங்கள் பற்றி விசாரணை செய்த கே. டி. டி' சில்வா கமிஷனின் அறிக்கை செல்லுபடியாகாதென கொழும்பு மாவட்ட நீதிபதி திரு. என். சிவஞானசுந்தரம் இன்று தீர்ப்பளித்தார்,**

கடற்படை விசாரணைக் கமிஷனின் அறிக்கை செல்லுபடியாகாதெனக்கோரி அதில் சம்பந்தப்பட்ட பல அதிகாரிகள் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். இந்த வரிசையில் முன்னாள் லெப்டினன்ட்ஸ்ம். ஏ. ஐ. சண்முகம் தொடர்ந்த வழக்கே முதலாவதாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

திரு. சண்முகம் அரசாங்கத்தின் பேரில் அட்டோர்ணி ஜெனரல்மீது இவவழக்கைத் தொடர்ந்திருந்தார். இவ்வழக்கைவிசாரித்த கொழும்பு மாவட்ட நீதிபதி திரு. என். சிவஞானசுந்தரம், கமிஷன் அறிக்கை செல்லுபடியாகாதெனவும், திரு. சண்முகத்துக்கு நஷ்டஈடாகவும் பென்ஷனுக்கவும் அரசாங்கம் 22,859 ரூபா 28 சதம் செலுத்தவேண்டும் எனவும் தீர்ப்பளித்தார்.

நீதிபதி தமது தீர்ப்பின்போது பின்வருமாறு குறிப்பிட்டார்:-

"ஒரு விஷயம் நிகழ்ந்துவிட்டது என்று முடிவுசெய்து கொண்ட மனத்துடனே அல்லது சந்தேகத்தின் கண்கொண்டோ, அல்லது துப்பறியும் பாவத்துடனேயோ விசாரணை செய்யும் கமிஷனர் எவரும் செயலாற்றக்கூடாது. தமது முடிவுக்கு சார்பான சாட்சியங்களை ஏற்றுக்கொண்டும் எதிரான சாட்சியங்களை நிராகரிப்பதும் தவறானதாகும். இந்தக் கமிஷன் அறிக்கை, விசாரணை நீதிபரிபாலனத்தின் அடிப்படை தத்துவத்தையே அவமதிப்பதாக உள்ளது எனவே கமிஷனரின் அறிக்கை செல்லுபடியாகாததாகும்".

## உத்தியோகமொழி உத்தியோகஸ்தர்

கொழும்பு, புதன்

திறைசேரியில் உள்ள உத்தியோகமொழி விவகாரங்களுக்கு பொறுப்பாக திரு. விமால் நவசமுவா நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கடந்த இரண்டு மாதங்களாக திறைசேரியில் கடமையாற்றுகிறார். அதற்கு முன்னர் மொனறகலை அரசாங்க அதிபராக கடமையாற்றினர்.

## 'வேலையிலிருந்து விலக்காதீ'

### மந்திரி உத்தரவு

கொழும்பு, புதன்

கூட்டுறவு மொத்த ஸ்தாபனத்துக்கு அண்மையில் சில புதிய நியமனங்கள் செய்யப்பட்டிருந்தன. இந்த நியமனம் சம்பந்தமாக தேர்தல் நடைபெறுவதற்கு முன்னரே சில புகார் கிளப்பப்பட்டிருந்தன. இப்புதிய நியமனங்களின் கீழ் தெரிவு செய்யப்பட்டவர்களில் அடிப்படை தகுதி உள்ளவர்களை வேலையிலிருந்து விலக்கக்கூடாது என வர்த்தகமந்திரி டாக்டர் எம். வி. பி. பீரிஸ் உத்தரவிட்டுள்ளார்.

## விசாரணைக்கமிஷன் நியமிக்க கோரிக்கை

கொழும்பு, புதன்

கடந்த ஐந்து வருட காலங்களிலும் கல்வி இலாகாவில் உள்ள வித்தியாதரிசி தொடக்கம் வித்தியாதிபதிவரையான பதவிகளுக்கென இடம்பெற்ற நியமனங்கள் பதவி உயர்வுகள் பற்றி விசாரிக்க ஒரு விசாரணைக் குழுவை நியமிக்கவேண்டும் எனக் கல்வி நிர்வாக சேவைச் சங்கத்தின் விசேடக் கூட்டமொன்றில் தீர்மானிக்கப்பட்டது. இதுகுறித்து மந்திரிக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஐந்துவருட காலத்திலும் இப்பதவிகளுக்கு இடம்பெற்ற நியமனங்களிலும், பதவி உயர்வுகளிலும் அரசியல் காரணங்களே கவனிக்கப்பட்டன என்றும் சேவை மூப்போ அன்றி தகுதியோ சிறிதளவேனும் கவனிக்கப்படவில்லை என்றும் அந்த தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. நியமனங்களில் மொழி, சமய, [illegible] பட்டதாகவும் தீர்மானம் தெரிவிக்கிறது.

# முன்னாள் உதவிமந்திரி ரூ. 1000 பிணையில் விடுதலை

கொழும்பு, புதன்

முன்னாள் உள்ளூராட்சி உதவிமந்திரியும், முன்னாள் பொரளை எம். பி.யுமான திருமதி விவியன் குணவர்த்தனவை கொழும்பு அடிஷனல் மாஜிஸ்டிரேட் இன்று காலை ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதித்தார். தேர்தல் தினமான மார்ச் மாதம் 22-ந் திகதி மோட்டார்கொடையின் கார் ஒன்றை தெருவில் மறித்து, காருக்குச் சேதம் விளைவித்ததாகவும், வழிப்பறி செய்ததாகவும் குற்றம் சாட்டி மூன்று பேர்மீது தொடரப்பட்ட வழக்கு இன்று காலை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மூன்று எதிரிகளில் திருமதி விவியன் குணவர்த்தனவும் ஒருவர்.

பொரளையைச் சேர்ந்த சப்பையா வாமதேவன் என்பவர் சார்பில் மார்ச் மாதம் 22-ந் திகதி இரவு சிறிதர்ம மாவத்தையால் சென்றுகொண்டிருக்கையில், இன்னொரு கார் தனது காரை வழிமறித்ததாகவும், காருக்குள் இருந்த இருவர் இட்டு கட்டளைப்படி மூன்றுமவர் ஒருவர் தனது பேனாவை பறித்தும் என்பலைப்பில் இருந்த 52 ரூபாவையும் பறித்ததுடன், தனது காரையும் சேதப்படுத்தியதாகவும் மூவர் மீதும் வழக்குத் தொடர்ந்திருந்தார். இன்று இவ்வழக்கு கொழும்பு அடிஷனல் மாஜிஸ்டிரேட் முன்னிலையில் இன்று காலை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மூன்று எதிரிகளையும் தலா 1000 ரூபா பிணையில் செல்ல மாஜிஸ்டிரேட் அனுமதித்து விசாரணையை இம்மாதம் 21-ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## மந்திரியின் முயற்சி

பம்பலப்பிட்டி, புதன்

இலங்கை விமான போக்குவரத்துச் சேவை நிர்வாகத்தை முற்றிலும் சீர்திருத்தி அமைக்க போக்குவரத்து மந்திரி திரு. ஈ. ஏல். பி. ஹருள் தீர்மானித்துள்ளார், இதைமுன்னிட்டு உயர் பதவி வகிக்கும் சில உத்தியோகத்தர்கள் மாற்றம் செய்யப்படலாமென நம்பப்படுகிறது,

நிர்வாகத்தை சீர்திருத்தி அமைக்கும் முயற்சியில் தாம் ஒபயசேகரா அறிக்கையை கவனமாக ஆராய்ந்துவருவதாக மந்திரி தெரிவித்துள்ளார்,

## வருவாய்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டதெனினும் "பொலிஸ் நிலையங்களில் சிறப்பான முறையில் புதுவருடத்தைக் கொண்டாடுங்கள்" என இன்ஸ்பெக்டர் ஜெனரல் பொலிஸ் இலாகாவினரைக் கோரியுள்ளார். வீடு செல்லாமலே காரியாலயத்தில் புதுவருடம் கொண்டாடும் பாக்கியம் பொலிஸ் உத்தியோகஸ்தர்களுக்கு மாத்திரமே!

## மேஜர் ராஜபக்ஷ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புக்கு தகுந்தபடி என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பதுபற்றி இராணுவத்தினர், அட்டோர்னிஜெனரலிடம் ஆலோசனை கேட்டுள்ளனர்.

புரட்சிசதிவழக்கு நடைபெற்றுக்கொண்டிருந்த சமயம், மேஜர் ராஜபக்ஷா ஆயுதங்கள் பாதுகாக்கும் சிப்பந்தி அதிகாரியாக கடமையேற்றார்,

## புதுவருட ரயில் சேவைகள்

கொழும்பு, புதன்

தமிழ் - சிங்கள புதுவருடத்தையொட்டி விசேஷ ரயில் சேவை வேண்டும் என திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் விடுத்த கோரிக்கையை ரயில்வே ஜெனரல் மனேஜர் ஏற்றுள்ளார்.

இம்மாதம் 10-ந் திகதியும் 18-ந் திகதியும் விசேஷ ரயில் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. 10-ந் திகதி: கொழும்பிலிருந்து நண்பகல் 1-15க்கு காங்கேசன்துறைக்குப் புறப்படும். இந்த ரயில் யாழ்ப்பாணத்தை 9-02க்கும் காங்கேசன்துறையை 9-30க்கும் சென்றடையும். 18-ந்திகதி: இரவு நேரத்தில் இரண்டு விசேஷ ரயில்கள் சேவையில் ஈடுபடும். பிரயாணிகளின் வசதிக்கேற்ப மற்றுமொரு ரயிலும் சேவைக்கு விடப்படும்.

## தொண்டமான் - சாஸ்திரி பேச்சு

புதுடில்லி, ஏப். 7

இங்கு விஜயம் செய்துள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். தொண்டமான் இன்று பிரதமர் சாஸ்திரியைச் சந்தித்து பேச்சுக்கள் நடத்தினர். சாஸ்திரி - ஸ்ரீமா ஒப்பந்தத்தை நிறைவேற்றுவது குறித்து இவர்கள் பேச்சுநடத்தினார்கள். பிரஜாவுரிமை பிரச்னை தீர்க்கப்படவேண்டும் என்றும் சட்டவிரோதக்குடியேற்றக்காரர்களை தற்காலிகமாக தடுப்பு முகாம்களில் வைத்திருக்காது அவர்களின்மீது உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு. தொண்டமான் கேட்டுக்கொண்டார்.

உடுப்பிட்டி, புதன்

வடகரணை வளர்மதி விளையாட்டுக் கழகத் தினகரன் 25 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டி இம்மாதம் 14-ந் திகதி புதன்கிழமை நடைபெறவிருக்கிறது.

## இலங்கையில் இந்திய முதலீடு

புதுடில்லி, ஏப், 8

இந்தியத்தொழிலதிபர்கள் இலங்கை உட்பட 7 நாடுகளில் கூட்டாக தொழில் நடத்தும் திட்டத்தை மேற்கொள்ளவிருக்கிறார்கள்.

இவர்கள் அந்தந்த நாடுகளில் அரசாங்கத்துடன் அல்லது, தனியார்துறையுடன் ஒன்றுசேர்ந்து தொழில்களை நடத்துவார்கள்.

## ஞானப்பிரகாச முனிவர் குருபூசை

யாழ்ப்பாணம், வெள்ளி

ஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர் குருபூசை வருகிறசனிக்கிழமை யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் மூலவியார் செ. முத்துத்தம்பியின் தலைமையில் நடைபெறும், திருவாளர்கள் கு. அம்பலவாணர், சி. பொன்னம்பலம், க. கணபதிப்பிள்ளை ஆகியோர் உரை நிகழ்த்துவர்.

வடமாநில

## சைவஇளைஞர் வருடாந்தக்கூட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

வடமாநில சைவஇளைஞர் மாமன்றத்தின் வருடாந்தக் கூட்டம் வருகிற செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம்வண்ணை நாவலர் வித்தியாசாலையில் நடைபெறவிருக்கிறது. இக் கூட்டத்தில் பலருடைய பேச்சுகளும் புதுவருட நிர்வாகிகள் தெரிவும் இன்னும் பல நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


புதுவருடப் பிறப்பை முன்னிட்டு
8-4-65 — 12-4-65

# மலிவு விற்பனை

நடைபெறும்:

கைத்தறிச் சேலைகள் 100, 120, 160 நம்பர்
மற்றும் இலங்கா வேட்டி சால்வை சேலைகள்
வோயில் வேட்டிகள்
மற்றும் எல்லா ஜவுளி வகைகளும் விலைகள்
குறைக்கப்பட்டிருக்கின்றன.
தேவைக்கு முந்திக் கொள்ளுங்கள்

**ஆ. அப்பையா அன் கோ.,**

82, கே. கே. எஸ். றோட், 54, பெரியகடை,
போன்: 506 யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி [illegible] உள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 9-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org